**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.30/2024 - PW- 11**

| | |
|---|---|
| Name | திரு.அசோக்குமார் |
| Husband/Father Name | ராஜீ |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | தடய அறிவியல் துணை இயக்குநர் (ஓய்வு) |
| Age | 64 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 28.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து பணி ஓய்வில் உள்ளேன். நான் பணியில் இருந்த போது கடந்த 25.07.2019 அன்று கொண்டப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.285/2019 வழக்கில் இறந்து போன சுப்பிரமணி, வயது 23, என்பவரது உடல் உள்ளூறுப்புகள் பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அவர்களிடமிருந்து பெறப்பட்டு 30.07.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது.

உடல் உள் உறுப்புகளான இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம், மூளை, இரத்தம் மற்றும் உப்பு நீர் ஆகியவற்றை ஆய்வு செய்ததில் அவற்றில் ஆல்கஹால் அல்லது வேறு நச்சு பொருட்கள் ஏதும் கண்டறியப்பவில்லை. இது நான் வழங்கிய நஞ்சுயியல் ஆய்வறிக்கை ஆகும். அந்த நஞ்சியியல் ஆய்வறிக்கை **அதசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் இவ்வழக்கில் இறந்த சுப்பிரமணி வயது 23, என்பவரை பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட மாதிரி இரத்தம் 25.07.2019

அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு குருதி வடிநீரியியல் ஆய்விற்காக தடய அறிவியல் துறை, சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. சென்னை குருதி வடிநீரியியல் பிரிவில் இருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையில் மேற்படி இரத்தத்தின் தொகுதியை அறுதியிட்டு கூற இயலவில்லை என ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அந்த குருதி வடிநீரியியல் ஆய்வறிக்கை **அதசாஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும். இவ்வழகில் சம்பந்தப்பட்ட மாதிரி பொருட்கள் நீதித்துறை நடுவர், சோளிங்கர் அவர்களிடமிருந்து 09.09.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு 26.09.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது.

பொருள். எண். 1 – அடர் பழுப்பு கறையுடன் கூடிய மணல்,

பொருள். எண். 2 – சாதா மணல்,

பொருள். எண். 3 – அடர் பழுப்பு கறையுடன் கூடிய 92 செ.மீ நீளமுடைய மரக்கட்டை,

பொருள். எண். 4 – கிழிந்த நீல நிற சட்டை,

பொருள். எண். 5 – அடர் பச்சை நிற சட்டை ,

பொருள். எண். 6 – 42 செ.மீ நீளமுள்ள துரு ஏறிய வெட்டுக்கத்தி,

பொருள். எண். 7 – அடர் பழுப்பு கறையுடன் கூடிய நீலம், வெள்ளை மற்றும் பழுப்பு குறுக்கு கட்டம் போட்ட முழுக்கைச் சட்டை,

பொருள். எண். 8 – அடர் பழுப்பு கறையுடன் கூடிய கிழிந்த நீல ஜீன்ஸ் டவுசர்,

பொருள். எண். 9 – கிழிந்த நீல நிற ஜட்டி,

மேற்கூறிய பொருட்களில் 1, 3, 7 மற்றும் 8 ஆகிய பொருட்களில் இரத்தக்கறை இருப்பது கண்டறியப்பட்டது. பொருள் எண். 2, 4 முதல் 6 மற்றும் 9 ஆகியவற்றில் இரத்தக் கறை கண்டறியப்படவில்லை. இரத்த கறை படிந்த பொருட்களை குருதி வடிநீரியியல் துறை, சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது நான் வழங்கிய உயிரியல் ஆய்வறிக்கை

ஆகும். அந்த உயிரியல் ஆய்வறிக்கை **அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சென்னை குருதி வடிநீர் பிரிவில் இருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையில் மேற்படி பொருட்களான 1, 3, 7 மற்றும் 8 ஆகியவற்றின் மூலம் மனித இனத்தை சார்ந்தது என்றும், அவற்றின் தொகுதிகளை அறுதி இட்டு கூற இயலவில்லை என ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த குருதி வடிநீர் ஆய்வறிக்கை **அதசாஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** செய்யப்படவில்லை.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.28 16:40:11 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.